# வேகம்

மாலையும் இரவும் சந்திக்கும் வேளையில்... கார்த்திக் தனது புது பல்சர் பைக்கில் பறந்து கொண்டிருந்தான். நல்ல அடைமழை சாலையை நனைத்திருந்தது. அது ஒரு தேசிய நெடுஞ்சாலை. மிதமான மழையில் பைக்கை வேகமாய் ஓட்டுவதென்பது கார்த்திக்கின் நீண்ட நாள் ஆசை. இன்று அவன் அந்த ஆசையைத் தீர்த்துக்கொண்டிருந்தான்.

அவன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த செல்ஃபோன் சிணுங்கியது. அதை அப்படியே தனது இடது கையால் எடுத்தான். அவனுக்கு ஒரு எஸ்.எம்.எஸ் வந்திருந்தது. அதை படித்தான்.

எஸ்.எம்.எஸ்-ஸின் தமிழாக்கம்
**"கருப்பு சாத்தானே என் கடவுள் - இந்த எஸ்.எம்.எஸ்-சை குறைந்தது 15 பேருக்கு அனுப்பாவிட்டால் மரணம் நிச்சயம். 15 பேருக்கு அனுப்பிவிட்டால் அடுத்த 1மணி நேரத்தில் ஒரு நல்ல செய்தி உன்னை வந்தடையும்."**
- இவ்வாறு அந்த எஸ்.எம்.எஸ்-சில் எழுதியிருந்தது.

இதைப்படித்த கார்த்திக் தனக்குத்தானே சிரித்துக் கொண்டான். அந்த தகவலை தனக்கு அனுப்பிய நண்பனின் பலவீனத்தை நினைத்துக் கொண்டான். சிரித்துக் கொண்டே தனது இடது கையால் அந்த தகவலை தனது செல்ஃபோனிலிருந்து அழித்தான்(டெலிட்). உடனே ஒரு பெரிய லாரி ஒன்று அவனது பைக்கின் அருகே வந்து ஒரே ஏற்றமாக அவன் பைக்கில் ஏறியது. நொடிப்பொழுதில் கார்த்திக் இறந்துப் போனான்.

அவன் இறந்ததற்கு காரணம் அந்த எஸ்.எம்.எஸ்-சை அலட்சியம் செய்ததல்ல. அவன் இறந்ததற்கு காரணம்... அவன் பைக் ஓட்டும்போது தனது செல்ஃபோனை உபயோகித்ததுதான். கவனம் சிதறும் இந்தச் செயலை யாரும் செய்யாமலிருத்தல் மிக மிக நல்லது.